FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8313242

1. District : Coimbatore PS: Vigilance & Anti Corruption Year: 2026 FIR No.: 14/2026/AC/CB Date: 17.8.2026 1900 hr
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு (மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act 1988 Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: as amended in 2018 Sections பிரிவுகள்: —
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 13.08.2026 Date to : 17.08.2026
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
   Time Period : Time from : 1030 h. Time to : 1150 h.
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 17.08.2026 Time : 1515 hrs
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) Vol-I Time : 1515 hr. 17/8/2026
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer typed in Tamil
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: At about 15 km South
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : — (b) Address : Lies within Jurisdiction of Coimbatore municipal corporation (South zone)
   முறைக் காவல் எண் முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : R. Prakash (b) Father's/ Husband's Name : Rathinasamy
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 41/2026 (d) Nationality : Indian (e) Passport No. : —
   நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : — Place of Issue : —
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : Insurance agent (g) Address : Door No 324, Site No. 4. Phase II Raja Bhanderan nagar, Kurumbampalayam Pirivu, Madukarai market, Coimbatore
   தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tmt. Yamunadevi, Bill collector, 97. Ward, Coimbatore municipal corporation - South zone Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   no delay —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Enclosed Separate Sheet

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

17.08.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

17/8/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

17.08.2026 at 2000 h.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

G. Arumugam
Name: பெயர் Inspector of police
Rank: நிலை V.S.A. No. எண் .....
Coimbatore

கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்கள் முன்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.14/2026/ AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கை வரிசை எண்.C-8313242-ன் தொடர்ச்சி.

17.08.2026-ம் தேதி மதியம் 15.15 மணிக்கு காவல் ஆய்வாளர் G.ஆறுமுகம் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை மார்க்கெட், குரும்பம்பாளையம் பிரிவு, ராஜா பிருந்தாவன் நகர், கதவு எண்.324 என்ற முகவரியை சேர்ந்த திரு.ரத்தினசாமி என்பவரது மகன் திரு.R.பிரகாஷ் என்பவர் கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்து, புகார் சம்மந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில் கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலத்தில், 97-வது வார்டு வரி வசூலராக பணிபுரியும் திருமதி.யமுனாதேவி என்பவர் புகார்தாரர் மினி தியேட்டர் ஆரம்பிக்கவுள்ள இடத்தை ஆய்வு செய்து அதற்கான காலியிட வரியினை நிர்ணயம் செய்து ஒப்புதலுக்கு பரிந்துரை செய்து அதற்கான வரி புத்தகத்தை பெற்றுதர ஏற்பாடு செய்வதற்கு லஞ்சமாக ரூ.40,000/- கேட்டிருப்பது தெரியவந்தது. மேலும் புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டதில் எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் எதுவுமில்லை என்பதும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 17.08.2026-ம் தேதி 19.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.14/2026/AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன் படி மேற்படி எதிரி திருமதி.யமுனாதேவி, வரிவசூலர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரர் அளித்த புகாரின் விபரம் பின்வருமாறு:

அனுப்புனர் R.பிரகாஷ், (வயது 40), த/பெ.ரத்தினசாமி, கதவு எண்.324, சைட்.எண்.4, Phase-II, ராஜா பிருந்தாவன் நகர், குரும்பம்பாளையம் பிரிவு, மதுக்கரை மார்க்கெட், கோயம்புத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர். அய்யா, நான் கோயம்புத்தூர், மதுக்கரை மார்க்கெட், ராஜா பிருந்தாவன் நகரில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் MBA படித்துவிட்டு கடந்த 15 வருடங்களாக இன்சூரன்ஸ் ஏஜெண்ட் ஆக பணிபுரிந்து வருகிறேன். இந்நிலையில் நான் ஒரு மினி சினிமா தியேட்டர் ஆரம்பிக்கலாம் என்று முடிவு செய்து மதுக்கரை வட்டம், குறிச்சி கிராமம், புல.எண்.696/1சி3 மற்றும் 696/6பி-ல் உள்ள 39 சென்ட் இடத்தினை திருமதி.நல்லம்மாள் (25 சென்ட்) மற்றும் திருமதி.தங்கமணி (14 சென்ட்) சகோதரிகளிடமிருந்து கடந்த 23.12.2025-ம் தேதி முதல் 7 வருட காலத்திற்கு என் பெயரில் இடவாடகை ஒப்பந்தம் பெற்றேன். பின்னர் மினி சினிமா தியேட்டர் ஆரம்பிக்கும் பொருட்டு ஆட்சேபனை இன்மை சான்று பெற வேண்டி கோவை மாநகராட்சி அலுவலகத்தில் விண்ணப்பித்தபோது, மேற்படி இடத்திற்கு காலி இட வரி கட்டினால்தான் கொடுக்க முடியும் என்று சொல்லிவிட்டார்கள். அதன் விண்ணப்பம் தற்போதும் காலி இட வரி கட்ட வேண்டி நிலுவையில் இருந்து வருகிறது. எனவே நான் இடத்தின் உரிமையாளர்களிடம் இந்த விபரத்தை கூறியபோது, அவர்கள் என்னையே காலி இட வரி கட்டி முடிக்க தேவையான வேலையை என்னையே பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டார்கள். அதனடிப்படையில் நானும் கடந்த 05.08.2026-ம் தேதி கோவை தெற்கு மண்டல மாநகராட்சி அலுவலகம் அமைந்துள்ள குனியமுத்தூர் சென்று விண்ணப்பம் பெற்று அதனை பூர்த்தி செய்து அத்துடன் இடத்தின் பத்திர நகல், வில்லங்கச்சான்று ஆகியவற்றை இணைத்து மேற்படி இடத்தின் உரிமையாளர்கள் திருமதி.நல்லம்மாள் மற்றும் திருமதி.தங்கமணி ஆகியோர்களின் பெயரில் தனித்தனியாக விண்ணப்பம் செய்தோம். அதன்பின்னர் கடந்த 11.08.2026-ம் தேதி மாலை சுமார் 05.40 மணிக்கு எனது செல்போன் எண்.8825458588-க்கு 97-வது வார்டு பில்கலெக்டர் திருமதி.யமுனாதேவி அவர்கள் அவரது செல்போன் எண்.9952609049-ல் இருந்து என்னை தொடர்புகொண்டு, நான் ஆரம்பிக்கயுள்ள மினி தியேட்டர் இடத்தினை

அடுத்த நாள் 12.08.2026-ம் தேதி சாய்ந்திரம் சைட் இன்ஸ்பெக்சன் செய்ய வருவதாகவும் என்னை சைட்டில் காத்திருக்கும்படியும் சொன்னார். அதன்படி நானும் சைட்டில் அடுத்தநாள் காத்திருந்தேன். அன்று மதியம் சுமார் 03.00 மணிக்கு எனக்கு செல்போனில் தொடர்புகொண்டு சாய்ந்திரம் 04.00 மணிக்கு வந்துவிடுவதாக கூறினார். நானும் காத்திருந்தேன் ஆனால் அவர் அன்று மதியம் 04.00 மணி வரை வராததால் நான் அவரை என் செல்போனில் இருந்து தொடர்பு கொண்டு, எப்போது வருவீங்க என கேட்டேன். அதற்கு அவர் வேலையில் பிசியாக இருப்பதாகவும், அடுத்தநாள் காலையில் வருவதாக சொன்னார். எனவே நானும் அடுத்தநாள் 13.08.2026-ம் தேதி காலை 09.45 மணிக்கு மேற்படி மினி சினிமா தியேட்டர் ஆரம்பிக்கவுள்ள இடத்திற்கு சென்று வரி வசூலர் திருமதி.யமுனாதேவி அவர்களுக்கு செல்போனில் தொடர்பு கொண்டு தான் வந்துவிட்ட விபரத்தை தெரிவித்தேன். அவரும் சற்று நேரத்தில் வந்துவிடுவதாக தெரிவித்தார். அதன்படி அவரும் அன்றே காலை சுமார் 10.30 மணிக்கு அங்கு வந்து தியேட்டர் அமையவுள்ள இடத்தை பார்வையிட்டு என்னிடம் காலி இடவரி போட வேண்டும் என்றால் கொஞ்சம் கவனிக்க வேண்டியிருக்கும் என்றார். நான் எவ்வளவு என கேட்டேன் அவர் மொத்தம் எத்தனை சென்ட் இடம் என்று கேட்டார். நான் 39 சென்ட் இடம் என்று சொன்னவுடன். வாயில் முனுமுனுத்துக்கொண்டே ரூ.45,000/-ஐ என்னிடம் கொடுத்து விடுங்கள், நான் உங்கள் பைலை மேலதிகாரிக்கும் அனுப்பி உங்கள் வேலையை சீக்கிரம் முடித்துக்கொடுக்கிறேன் என்றார். அதற்கு நான் கொஞ்சம் கம்மி பன்னுங்க என்று கேட்டபோது, அவர் அலுவலகத்தில் மேல் அதிகாரிகளுக்கும் கொடுக்க வேண்டும் என்றும் குறைக்க முடியாது என்றும் சொன்னார். நான் அவரிடம் வேலை முடிந்த பிறகு பணம் கொடுத்து விடுகிறேன் என சொன்னேன். அதற்கு அவர் பணம் கொடுத்தால் தான் அலுவலகத்தில் பைல் மூவ் ஆகும் என பதிலளித்தார். நானும் வேறு வழியில்லாமல் சரி என்று சொல்லிவிட்டேன். அவரும் அங்கிருந்து கிளம்பி சென்றுவிட்டார். அதன்பின்பு 14.08.2026-ம் தேதி மதியம் சுமார் 01.45 மணிக்கு பில்கலெக்டர் திருமதி.யமுனாதேவி அவர்கள் எனக்கு செல்போனில் தொடர்பு கொண்டு வில்லங்கச்சான்று வேண்டும் என்றும் அதனை சுந்தராபுரம் மாநகராட்சி வரிவசூல் மையத்திற்கு வந்து தன்னிடம் கொடுக்க சொல்லி கேட்டுக்கொண்டார். நானும்

அதன்படி அன்று மதியம் சுமார் 02.30 மணிக்கு சுந்தராபுரம், தக்காளி மார்கெட் அருகே உள்ள வரிவசூல் மையம் சென்று அங்கிருந்த திருமதி.யமுனாதேவி பில்கலெக்டர் அவர்களிடம் வில்லங்கச்சான்று கொடுத்துவிட்டு வெளியே வந்தேன் அப்போது அவரும் என்னை பின்தொடர்ந்து வெளியே வந்து, திருமதி.நல்லம்மாள் விண்ணப்பத்தில் 25 சென்ட்க்கான காலி இடவரி ஒப்புதலுக்கு கார்ப்பரேசன் டவுன்ஹால் மெயின் ஆபீஸ்க்கு அனுப்ப வேண்டி இருக்கும் என்றும், அங்கு அதிகாரிக்கு பணம் கொடுக்க வேண்டும் என்றும், தான் கேட்ட பணம் எப்போது தருவீங்க என கேட்டார். நான் வருகின்ற திங்கள், செவ்வாய் கிழமைகளில் தந்துவிடுகிறேன் என்று கூறி அங்கிருந்து கிளம்பிவிட்டேன். பணம் கொடுத்தால் மட்டும் தான் என்னுடைய பைல் மூவ் ஆகும் என்று அவர் சொன்னதனால் நான் பைலின் ஸ்டேஜை தெரிந்து கொள்வதற்காக வேண்டி பில்கலெக்டரை இன்று 17.08.2026-ம் தேதி காலை அழைத்தபோது அவர் அழைப்பை எடுக்கவில்லை. சிறிது நேரத்தில் பகல் சுமார் 11.50 மணிக்கு பில்கலெக்டர் திருமதி.யமுனாதேவி என்னை செல்போனில் அழைத்தார். நான் அவரிடத்தில் என்னுடைய பைலின் ஸ்டேஜ் பற்றி கேட்டபோது தான் பைலை தயார் செய்து கையெழுத்திற்கு வைத்து, கையெழுத்து ஆகிவிட்டது, மெயின் அலுவலகத்திற்கு கொண்டு செல்ல ஆளில்லாமல் உள்ளது கூடிய விரைவில் கொடுத்து அனுப்பிவிடுவேன் என்று சொல்லி பணம் ரெடியாகிவிட்டதா என்று கேட்டார். அதற்கு நான் பணம் கொஞ்சம் டைட்டா இருக்கு, இன்னும் ரெடியாகவில்லை என்றும் பணத்தை கொஞ்சம் கம்மி பண்ண முடியுமா என்று கெஞ்சி கேட்டேன். அதற்கு அவர் ரூ.5,000/- குறைத்துக்கொண்டு ரூ.40,000/- கொடுக்குமாறு அறிவுருத்தி பணம் சம்பந்தமாக மீண்டும் போனில் பேச வேண்டாம் என்று சொன்னார். நான் அவரிடத்தில் நீங்கள் கேட்ட பணம் ரூ.40,000/- ஐ அலுவலகம் வந்து தரட்டுமா என்று கேட்டபோது அவர் ஐயையோ அலுவலகம் வர வேண்டாம், நீங்கள் மதுக்கரை வந்து என்னை கூப்பிடுங்கள் நான் எங்கு வைத்து பணத்தை பெற்றுக்கொள்வது என்று அப்போது சொல்கிறேன் என்று தெரிவித்தார். நான் நடுத்தரவர்க்கம் என்பதாலும், இந்த மினி தியேட்டரை ஆரம்பிக்க நிறைய கஷ்டப்பட்டு பணம் ரெடி பண்ணி உள்ளேன். இந்த நிலையில் திருமதி.யமுனாதேவி, பில்கலெக்டர் கேட்டும் லஞ்சம் ரூ.40,000/- என்பது எனக்கு பெருந்தொகையாக இருந்தது, மேலும் இவ்வாறு லஞ்சமாக பணம் கொடுக்க எனக்கு விருப்பமும்

இல்லை. எனவே நான் மினி தியேட்டர் ஆரம்பிக்கவுள்ள இடத்தை ஆய்வு செய்து அதற்கான காலியிடவரியினை நிர்ணயம் செய்து ஒப்புதலுக்கு பரிந்துரை செய்து அதற்கான வரி புத்தகத்தை பெற்றுதர ஏற்பாடு செய்வதற்கு என்னிடம் லஞ்சமாக ரூ.40,000/- கேட்கும் பில்கலெக்டர் திருமதி.யமுனாதேவி மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நாள்: 17.08.2026, இடம்: கோயம்புத்தூர், இப்படிக்கு, sd.XXXXX 17.08.2026 (R.PRAKASH). Respected Madam, Received the complaint on 17.08.2026 at about 15.15 hrs. sd.XXXXX, 17.08.2026, G.Arumugam, Inspector of Police, V&AC, CBE. Respected Madam, After conducting a Discreet Enquiry, a case in Coimbatore V&AC Cr.No.14/2026/AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered by me on 17.08.2026 at about 1900 hrs sd.XXXXX, 17.08.2026, G.Arumugam, Inspector of Police, V&AC, CBE. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனு ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

17/8/2026

(G.ஆறுமுகம்),
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.